# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.7 (LW10 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கிருஷ்னவேனி | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | மொக்கைராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சடையம்பட்டியில் குடியிருந்து அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இறந்து போன சென்ராயன் எனது சகோதரன். எதிரிகளை தெரியும். 2ஆம் எதிரி எனது சகோதரனின் மனைவி ஆவார். என் சகோரன் 2ஆம்எதிரியை திருமணம் செய்து துளசி வியாபரம் செய்து வந்தார். அப்போழுது எனது சகோதரனுக்கும் அவரது மனைவிக்கும் இடையே அவ்வப்போது கருத்து வேறுபாடு இருந்து வந்தது. அப்போது எனது சகோதரன் தொலைபேசில் 1ஆம் எதிரிக்கும் 2ஆம் எதிரிக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததாக கூறினார். எனது சகோதரன் 2ஆம் எதிரிக்கு எதிராக நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் அந்த புகாரில் 1ஆம் எதிரிக்கும் 2ஆம் எதிரிக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததாக புகார் கொடுத்தார். அப்போது காவல்துறை அதிகாரி அவர்கள் என் சகோதரையும் 2ஆம் எதிரியையும் அழைத்து சமாதானம் செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் 1 மாதம் கழித்து எனது கணவர் எனது சகோதரன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் சகோதரன் வீட்டிற்கு சென்று பார்த்த போது என் சகோதரன் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார். என் சகோதரனுக்கு மூக்கிலும், கழுத்திலும் இரத்தக்காயங்கள் இருந்தது. அப்போது என் சகோதரனின் கழுத்தில் சுத்தி இருந்தது. அவர் வீட்டில் இருந்த மின்விசிறியில் சேலை சுற்றி அறுக்கப்பட்டிருந்தது. அப்போது நான் 2ஆம் எதிரியிடம் உனக்கு தெரியாமல் சென்ராயன் எப்படி இறந்திருப்பார் என்ற கேட்டேன், அதற்கு 2ஆம் எதிரி எனக்கு தெரியாது என்றார்.

அப்போது எதிரி குளித்துவிட்டு தலை ஈரத்துடன் புதிய நைட்டி உடுத்தியிருந்தார். அந்த நைட்டியின் முன்பக்கம் முதுகு புறமாகவும், பின்பக்கம் தனது முன்புறமாகவும் மாற்றி அணிந்து இருந்தார். இறந்த போன எனது சகோதரனின் உடலை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக எனது தகப்பனார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீஸ் விசாரணையில் அப்போது எதிரி குளித்துவிட்டு தலை ஈரத்துடன் புதிய நைட்டி உடுத்தியிருந்தார். அந்த நைட்டியின் முன்பக்கம் முதுகு புறமாகவும், பின்பக்கம் தனது முன்புறமாகவும் மாற்றி அணிந்து இருந்தார் என்ற விபரத்தை நான் சொல்லவில்லை. தற்போது என் அம்மாவும் அப்பாவும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பற்றியும், புகார் கொடுத்து 1 மாதம் கழித்து இறந்து கிடந்தார் என்ற விபரத்தையும் போலீஸ் விசாரணையில் சொன்னேன். எனது சகோதரன் என்னிடம் 1ஆம் எதிரிக்கும் 2ஆம் எதிரிக்கும் தொடர்பு இருந்ததாக தொலைபேசியில் சொன்னார் என்ற விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. தற்போது என் அம்மாவும் அப்பாவும் சொல்லிக் கொடுத்தன் பெயரில் அவ்வாறு தொடர்பு இருந்தததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தொலைபேசியில் எனது அண்ணன் என்னிடம் கூறிய விபரத்தை என் பெற்றோரிடம் 1 மாதத்திற்கு முன்பு சொல்லியுள்ளேன். போலீசார் என்னை எனது அண்ணன் இறந்த அன்று காலை 7.00 முதல் 8.00 மணியளவில் விசாரித்தார்கள். அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை. எனது ஊருக்கும் எனது அண்ணன் ஊருக்கும் இடையே சுமார் 20 கி.மீ தூரம் என்றால் சரிதான். நான் 6.00 மணிக்கு போனேன், போலீசார் 7.00 மணிக்கு வந்தனர். என் அப்பா புகார் கொடுக்க போன போது நான் உடன் போகவில்லை. என் அப்பா புகார் கொடுக்க செல்வதற்கு முன்பு நான் மேற் சொன்ன விபரங்களை என் அப்பாவிடம் சொன்னேன். என் அண்ணன் வீட்டிற்கு மாடி வீடு, கீழ் வீடு என்று இரண்டு பகுதிகள் உள்ளன, மாடி வீட்டிற்கு படிகள் வெளியே உள்ளன. இறந்த சென்றாயனுக்கு செல்வி மற்றும் கண்மணி ஆகியோருடன் கள்ள தொடர்பு இருந்ததாக சொல்கிறார்கள் என்றால் அது பற்றி நான் கேள்வி படவில்லை. இறந்த பிறகு சுமார் 2 மாதம் அ.சா.1ன் வீட்டில் தான் 2ஆம் எதிரி இருந்தார் என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் 2ஆம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், இறந்து போன எனது தம்பி எதிரிகளுக்கு எதிராக மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இறந்து போனவருக்கு கடன் மற்றும் கள்ளதொடர்பு பிரச்சனை இருந்தது என்றும் அது குறித்து எனக்கு தெரியும் என்றும் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த போனவர் 1ஆம் எதிரியிடம் ரூ.5 லட்சம் வரை கடன் வாங்கி இருந்தார் என்றும், அதன் பின்னிட்டு இறந்தவரின் அப்பாவிடம் (அ,சா.1) கடனை திருப்ப கேட்டு பிரச்சனை செய்ததால் அந்த

பிரச்சனையில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிரியிடமும் அ.சா.1 பணம் கேட்டு பிரச்சனை செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் தெரிந்தும் அ.சா.1 தெரிந்தவர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. முதல் எதிரி இறந்து போனவர் வீட்டின் அருகில் குடியிருக்கிறார் என்று சொல்வது பொய் என்றும், அவர் தனது தோட்டத்து வீட்டில் குடியிருக்கிறார் என்றும் சொல்வது சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 16:59:35 +0530

Additional District Judge,

Dindigul.